

# திறவுகோல்

2055
ஆடி
மாத
இதழ்

வெளியீடு:
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# தலைமை இல்லாத பள்ளிகளால் தரமான கல்வி கிடைப்பதில் கேள்விக்குறி!

*தமிழ்நாட்டில் முதல்முறையாகத் தொடக்கக்கல்வி வரலாற்றில் தலைமையாசிரியர்கள் இல்லாமலேயே பள்ளிகள் திறக்கப்பட்டு ஐம்பது நாட்களைக் கடக்க இருக்கின்றன. தமிழகத்தில் செயல்படும் அரசுப்பள்ளிகள் இதுவரை இல்லாத அளவுக்குக் கடும் நெருக்கடியைச் சந்தித்து வருவது குறிப்பிடத்தக்கது. அதாவது 670 மேனிலைப் பள்ளிகள், 435 உயர்நிலைப் பள்ளிகள், 2994 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் உள்ளிட்ட 4500 அரசுப் பள்ளிகள் இப்போது தலைமை ஆசிரியர்கள் இல்லாமல் இயங்கிக் கொண்டிருப்பதாகப் புள்ளிவிவரங்கள் வழி அறிய முடிகிறது. இதுகுறித்து அரசுக்கும் சமூகத்திற்கும்  கவலையோ, வருத்தமோ கிஞ்சித்தும் இருப்பதாகத் தெரியவில்லை. குறைந்தபட்சம் அக்கறை கொண்டதாகக் கூட தென்படாதது வருந்தத்தக்கதாகும்.*

*இந்த அவலநிலை நீதிமன்ற வழக்குகளைக் காரணம் காட்டி கடந்த ஓரிரு ஆண்டுகளுக்கு மேலாக உயர்நிலை மற்றும் மேனிலைப்பள்ளிகளில் தலைமையாசிரியர் பதவி நிரப்பப்படாமல் இருந்து வந்த நிலையில் நடப்புக் கல்வியாண்டில் இதன் நீட்சியாக 6-14 பள்ளி வயதுக் குழந்தைகள் பயிலும் நடுநிலை மற்றும் தொடக்கப்பள்ளிகளிலும் விரிந்து படர்ந்து விட்ட கொடுமையை என்னவென்பது?*

*தலைமைப்பதவி என்பது ஏதோ ஒரு நாற்காலியில் யாரோ ஒருவரை அமர்த்திடும் பொம்மைப் பதவி அல்ல. அஃது ஒட்டுமொத்த பள்ளி நிர்வாகத்தையும் ஒரு குடையின் கீழ் செம்மையாக வழிநடத்திடும் ஆளுமை கொண்டதாகும். ஒரு நாட்டின் நுண்ணிய அலகாக விளங்கும் குடும்பம் மற்றும் ஒரு குடும்பத்தின் பேருருவாகத் திகழும் நாடு ஆகிய இரண்டிற்கும் நல்ல தலைமை நிச்சயம் அவசியம். வெறும் கணிணிகளும் கோப்புகளும் தாள்களும் தூசுகளும் நிரம்பிய அலுவலகங்களுக்கே ஒரு தலைமைப்பதவி இன்றியமையாததாக ஈண்டு உள்ளது குறிப்பிடத்தக்கது.*

*அந்த வகையில் பள்ளிகள் என்பவை வெறும் செங்கற்கள் சூழ்ந்த வெற்று அறைகள் அல்லவே; பிஞ்சு உயிர்கள் இன்புற்று வாழும் கற்றல் வாழிடங்களாவன. பெயருக்குப் பொறுப்பு ஆசிரியர் ஒருவரை அந்த இடத்தில் தற்காலிகமாக நியமித்து விட்டால் எல்லாம் சரியாகி விடும் என்று நம்புவது பேதைமை. எந்தவொரு அதிகாரமும் அடிபணிந்து பணிபுரிதலும் இல்லாத இடத்தில் நல்ல கற்றல் விளைவுகளை எவ்வாறு எதிர்பார்க்க இயலும்?*

அதுபோல், இந்த நெருக்கடியான காலகட்டத்தில் வீணாகும் கல்வியை எதைக் கொண்டு ஈடுகட்ட முடியும்? கல்வி தானே என்கிற அலட்சியம் அதுகுறித்து சம்பந்தப்பட்ட அனைவரிடமும் மேலோங்கி இருப்பதுதான் இதற்கு முழுமுதற் காரணமாகும். இதையே நாட்டுக்கு, வீட்டுக்கு, உயிருக்குக் கேடு தரும் மதுவை ஓர் ஆணை மூலம் மூடச் சொல்லிவிட்டால் அந்த ஆணையைச் சிரமேற்கொண்டு பணிந்து இழுத்து மூடி விடுவார்களா என்ன? அவமதிக்க இங்கு வலியுறுத்தவில்லை. அக்கறை எடுத்துக் கொண்டு எந்தத் தரப்பும் பாதிக்காத வண்ணம் உரிய காலத்தில் தக்கதொரு கொள்கை முடிவு எடுப்பதில் ஏன் இவ்வளவு அசட்டை என்பது தான் இங்கு கேள்வி!

எங்கேனும் நிரந்தரமாக ஆண்டு கணக்கிலோ அல்லது மாதக் கணக்கிலோ பொறுப்பு மாவட்ட ஆட்சியர், வருவாய் அலுவலர், வட்டாட்சியர், செயற்பொறியாளர், ஆணையர், தலைமை மருத்துவ அலுவலர், சார் பதிவாளர், காவல் கண்காணிப்பாளர் பணியிடங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், தலைமையாசிரியர் பணியிடத்திற்கு மட்டும் கூடுதல் பொறுப்புப் பதவியாக மாநில அளவிலும் சரி, ஒன்றிய அளவிலும் சரி போதிய பணிமூப்பு இல்லாத, எஞ்சிய தம் பணிக்காலத்தில் தலைமையாசிரியர் பதவி உயர்வே கிடைக்க வாய்ப்பில்லாத சம்பந்தப்பட்ட பள்ளி அளவில் மட்டுமே பணியில் மூத்த ஆசிரியரை பெருந்தன்மையோடு நியமிப்பதாகப் பறைசாற்றிக் கொள்வது என்பதும் கடமை முடிந்து விட்டது என்று அதுகுறித்து பேசாதிருப்பது என்பதும் நற்செயல் ஆகாது.

எல்லாவற்றிற்கும் மேலே உச்சியிலும் உயரத்திலும் இருப்பவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்றால் மக்களின் மனசாட்சியாகவும் குடியாட்சியின் உயிர்நாடியாகவும் இறையாண்மையின் இதயமாகவும் விளங்கும் மக்கள் மன்றங்கள் மற்றும் அரசுகளின் நிலைதான் என்ன? வளமான, வலிமையான, உயர்வான, உன்னதமான மானுடத்தை உண்டுபண்ணும் கல்வியை நட்டக் கணக்கில் சேர்த்து கைகழுவும் முயற்சியா? அல்லது தலைமுழுகும் பயிற்சியா? என்ற கேள்வி ஏழை, எளிய, விளிம்பு நிலை படிக்காத, பாமர பெற்றோர்களின் கேள்வியாக உள்ளது எண்ணத்தக்கது.

தலைமையாசிரியர் இல்லாவிட்டால் பள்ளி என்ன குடிமுழுகவா போகிறது என்று கேட்கத் தோன்றும். ஆம். ஆயிரம் அம்மாக்கள் வரலாம்; போகலாம். ஒவ்வொரு குழந்தையும் தேடித் தவிப்பது தமக்குச் சொந்தமான அம்மா ஒருவரைத்தான்! அப்படித்தான் ஒவ்வொரு பள்ளியும் தமக்குரிய தலைமையாசிரியருக்காகக் காத்திருக்கிறது... சுருங்கச் சொன்னால் தலைமையாசிரியர் இல்லாத பள்ளியும் கல்வியும் பாழ்! பள்ளியானது யாரோ ஒரு பொறுப்பு ஆசிரியரால் இயக்கப்படுமே ஒழிய தாமாக இயங்காது. அதாவது, செயற்கை சுவாசம் போல வேண்டுமானால் இழுத்துப் பறித்துக் கொண்டு மூச்சிருக்கும். சரியான இயக்கம் இருக்காது என்பது திண்ணம்.

*நீதிக்குத் தேவையானவை தக்க ஆதாரங்களும் சாட்சியங்களும் வாதங்களும் மட்டுமே. மனித மதிப்புகளும் மாண்புகளும் ஒருபோதும் கணக்கில் கொள்ளப்படுவதில்லை. திடீரென்று ஒரேயொரு தகுதித் தேர்வு தேர்ச்சியில் தான் தலைமையாசிரியரின் தகுதி உள்ளது என்று கூறுவது விந்தையாக உள்ளது. இதற்கு முன் பணியாற்றும் அல்லது பணிபுரிந்து பணிநிறைவு பெற்ற தலைமையாசிரியர்கள் யாவரும் தக்க தகுதி வாய்ந்தவர்கள் இல்லையா? அவர்களின் தலைமையின் கீழ் கற்றுக்கொண்ட கல்வி கல்வியே ஆகாதா? இந்தியத் துணைக்கண்டத்தில் தமிழ்நாட்டில் தான் இன்றுவரை பள்ளிகள் அனைத்திலும் தக்க தகுதி படைத்தவர்கள் தாம் ஆசிரியராகப் பணிபுரியும் நிலை தொன்றுதொட்டு உள்ளது.*

*இதில் பொறுப்பு தலைமையாசிரியர்களின் நிலை பரிதாபத்துக்குரிய ஒன்றாகும். தாம் ஏற்கனவே வகித்து வந்த வகுப்பு அல்லது பாட ஆசிரியராகவும் இல்லாமல் வேறுவழியின்றிப் புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் முழு அதிகாரம் மிக்க தலைமையாசிரியராகவும் பள்ளி நிர்வாகத் தலைவராகவும் பணிபுரிய முடியாமல் நாடோறும் வெந்து தணியும் கொடுமைகள் சொல்லவொணாதவை. சிங்க வேடமிட்டுக் கொண்டு பாவப்பட்ட பசுவாக சாதுவாக வாழ்தல் என்பதாகும்.*

*மேனிலைப்பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் மட்டும் பொறுப்புத் தலைமையாசிரியர் பணியிடத்திற்கு பள்ளி மேலாண்மைக் குழு மூலமாக தக்க கல்வித்தகுதி மிக்க பட்டதாரிகளைத் தொகுப்பூதிய அடிப்படையில் நியமனம் செய்து கொள்ள அரசு வழிவகை செய்துள்ளது. நடுநிலைப் பள்ளிகள் மற்றும் தொடக்கப்பள்ளிகள் ஆகியவற்றிற்கு இந்த சலுகையில்லை. எனினும், இஃது ஓர் வேதனைக்குரிய சேதியாகும்.*

*ஏனெனில், கடந்த கல்வியாண்டு முதற்கொண்டு நடப்புக் கல்வியாண்டில் 1 - 5 வகுப்புகள் உள்ள தொடக்கப்பள்ளிகள் அனைத்திலும் எண்ணும் எழுத்தும் திட்டம் கோலாகலமாக நடந்து வரும் வேளையில் தலைமையாசிரியர் பணியிடங்கள் காலியாக இருப்பது வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள அடித்தட்டு மாணவர்களுக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகும். இத்திட்டம் 1,2,3 வகுப்புகளுக்கு பல்வேறு கற்றல் களங்கள் அடிப்படையிலும் 4, 5 வகுப்புகளுக்குக் கற்றல் களஞ்சியம் அடிப்படையிலும் முறையே அரும்பு, மொட்டு, மலர் மற்றும் காய், கனி என்று மாணவர்கள் வகைப்படுத்தப்பட்டு அவற்றின் அடிப்படையில் கற்றல் கற்பித்தல் நிகழ்த்துவதற்கு இன்றைய சூழலில் ஒருங்கிணைந்த வகுப்புகளின் ஆசிரியர்களே திணறி வருகின்றனர்.*

*இத்தகைய நிலையில் இரு ஒருங்கிணைந்த வகுப்புகளையும் தலைமையாசிரியர் இன்றி ஒருவரே கையாளுவது என்பது கடவுளால் கூட இயலாத காரியமாகும். பதிலியாக ஒருவேளை தொகுப்பூதிய அடிப்படையில் புதிய ஆசிரியர் ஒருவர் பணிநியமனம் செய்யப்பட்டாலும் அது ஒருபோதும் முழுத் தீர்வாகாது. அது கண்ணைக் கட்டிக் காட்டில்*

விட்டது போலத்தான் இருக்கும். எண்ணிய குறிக்கோள் நிறைவேறாது. காலையில் எண்ணும் எழுத்தும் வகுப்பறைக்குள் நுழைந்தது முதல் மாலை வெளியில் வரும்வரை ஒருங்கிணைந்த வகுப்புகளின் இருபால் வயது முதிர்ந்த, உடல் உபாதைகள் நிறைந்த ஆசிரியர்கள் தம்மை முழுதாக மறந்து பம்பரமாக எப்போதும் குழந்தைகள் முன்னிலையில் சுற்றிச் சுழன்று கொண்டிருக்க வேண்டிய நிலையில் கூடுதலாக இரட்டைப் பணிச்சுமை என்பது மானுட அறமாகாது. இதன் காரணமாக, தொடக்கநிலை ஆசிரியர்களிடம் மன அழுத்தம் அதிகரித்து பணியை விட்டே ஓடிப் போகும் எண்ணமே மேலோங்கக் கூடும்.

ஆசிரியர்களின் பணி நிமித்தம் காரணமாக ஏற்படும் இந்த மன அழுத்தம் பிஞ்சுக் குழந்தைகளையும் அடித்தள கல்வியையும் வெகுவாகப் பாதிக்கும் என்பதை அரசு காலத்தில் உணர்தல் நல்லது. அதுமட்டுமின்றி, தக்க கொள்கை முடிவெடுத்து காலியாக உள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் தலைமையாசிரியர்களை நியமனம் செய்திட முன்வர வேண்டும். வழக்கு காரணங்களால் தற்போதைய சூழலில் பள்ளிகளில் ஏற்படும் கல்வி இழப்புகளை நீதிமன்றங்களில் சுட்டிக்காட்டி மனிதாபிமான அடிப்படையில் ஏழை, எளிய, விளிம்பு நிலை மாணவர்கள் சந்திக்கும் கற்றல் பாதிப்புகளைச் சரிசெய்யும் நோக்கில் உரிய வகையில் விலக்குப் பெற்று காலிப் பணியிடங்களை இன்மை ஆக்குதல் என்பது துரிதமாக மேற்கொள்ள வேண்டிய முடிவாகும்.

இருதரப்பு ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்காக அப்பாவி அரசுப் பள்ளிப் பிள்ளைகள் பாதிப்பது எந்த வகையிலும் நியாயமில்லை. இலவச கட்டாய தரமான கல்வி கற்பது என்பது ஒவ்வொரு குழந்தையின் அடிப்படை பிறப்புரிமை ஆகும். அதில் சுயநலம் காரணமாக மனித ஆக்கப் பேரிடரை விளைவிப்பதற்கு இங்கு யாருக்கும் உரிமையில்லை. இதுகுறித்து, தமிழக அரசின் நீண்ட நெடிய கனத்த மௌனம் கடைபிடித்தல் என்பது மாணவர் நலன் கருதி பார்க்கையில் சரியல்ல. சரியோ தவறோ ஏதேனும் ஒன்றை முன்வைப்பது தான் சாலச்சிறந்தது.

ஆசிரியர்களின் எந்தவொரு பதவி உயர்விற்கும் தகுதித் தேர்வு தேர்ச்சி தேவையில்லை என்பதை அரசு துணிந்து கொள்கை முடிவு எடுத்து அறிவிப்பது என்பது ஒரு வழியாகும். அல்லது தகுதித் தேர்வு தேவை என்று கருதும் பட்சத்தில் 2012 இல் பட்டதாரி மற்றும் இடைநிலை ஆசிரியர் பட்டியலின, பழங்குடியினருக்கான பின்னடைவுக் காலிப் பணியிடங்களில் (Backlog Vacancy) கட்டாயத் தகுதித் தேர்வு தேர்ச்சிக்கு ஐந்து ஆண்டுகள் சலுகை வழங்கி வழமைபோல் உரிய கல்வித் தகுதிகளை மட்டும் கணக்கில் கொண்டு பணிநியமனம் செய்தது போல பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு பெறுவோருக்குத் தகுதித் தேர்வுத் தேர்ச்சிக்கான சலுகையை நீட்டித்து போதிய கால அவகாசம் வழங்குவது என்பது பிறிதொரு வழியாகும்.

இதுதவிர, குழந்தைகளின் கல்வி நலனைக் கவனத்தில் கொண்டு அதனை மையப்படுத்தி நீதிமன்றத்தில் நடப்புக் கல்வியாண்டிற்கு மட்டும் பதவி உயர்விற்கு ஆசிரியர் தகுதித் தேர்வு தேவை என்பதிலிருந்து சிறப்பு விலக்குப் பெற்று காலிப் பணியிடங்கள் அனைத்தையும் நிரப்பி வழிவகை காணுதல் என்பது மூன்றாவது மாற்று வழியாகும். அப்படி அல்லாமல் ஏதும் செய்ய வாளாதிருப்பது என்பது காலம் கடந்து பெறப்படும் நீதியின் பொருட்டுக் காட்டப்படும் பச்சைக்கொடியால் நடப்புக் கற்றலுக்கு ஒரு பயனும் இல்லை. இது வெறும் கையில் முழம் போடச் சொல்வதற்கு ஒப்பாகும்.

இறுதியாக, தலைமை ஆசிரியர்கள் நிரப்பப்படாதப் பள்ளிகள் தலையில்லாத உடம்பிற்கு ஈடாகும். தற்காலிக தொகுப்பூதிய பதிலிகளால் நிறைவான கல்வியும் முழுமையான அடைவும் கிடைப்பது அரிது. பேருக்கு ஒப்பேற்றுவதில் ஒரு பயனும் விளையப் போவதில்லை. முதல் பருவம் முடிய உள்ள நிலையிலும் இதுகுறித்து உறுதியான நடவடிக்கை இதுவரை எடுக்கப்படாதது பாராமுகத்தையே எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. பொதுமக்கள் வரிப்பணத்தில் ஒரு பெரும் பகுதியை ஆக்கிரமித்துக் கொள்ளும் பள்ளிக் கல்வித்துறையின் தொலைநோக்கு இலக்குகளுக்கு இதுபோன்ற நிலைகள் முட்டுக்கட்டைகள் ஆகாதா?

தமிழ்நாடு முழுவதும் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட தலைமையாசிரியர்கள் இல்லாத பள்ளிகளில் பயிலும் வறுமையிலும் அறியாமையிலும் உழலும் கல்வியறிவற்ற, பாமர மக்களின் கடைசி நம்பிக்கை நட்சத்திரமாக மிளிரும் பச்சிளம் குழந்தைகளின் கல்வியில் மண்ணை அள்ளிப் போடுவதற்கு நாம் யார்?

—

எழுத்தாளர். மணி கணேசன்

---

# நமக்கானவர்கள்!

நடிப்பவர்களிடம் வேண்டுமானால்
நடித்துக் கொள்ளுங்கள் பரவாயில்லை.
ஆனால்...

நமக்காக நித்தமும் துடிப்பவர்களிடம்;
ஒரு போதும் நடித்து விடாதீர்கள்!

ஏனெனில் அவர்கள் தான்
நமக்கானவர்கள். நம் வாழ்விற்கான
உயிரோட்டங்கள்!

—

சா. நாகூர் பிச்சை,
துபாய்.



# இருள் தேசத்தின் இசைவு நான்

உருவமற்று இருப்பதெல்லாம்
உண்மைக்கு புறம்பானது இல்லை
உவமையற்று இருப்பது பற்றியும்
எனக்கு கருத்து இருக்கிறது
மேல் எழும்பி கீழ் வந்து
காற்றில் ஊடறுத்த
இருள் தேசத்தின்
இசைவு நான்
உற்று நோக்கின் உயிர் சூடு காணலாம்
உண்மைக்கு அருகே அசைதல் தேவை
யாருமற்ற வீட்டில் நானுமற்று திரிவது
இருள் பற்றும் மெழுகு வர்த்தி இம்சை
மூச்சு தேடும் நன்னாளில்
நானொரு புகைமூட்டமாய்
உங்கள் பின் நகர்கிறேன்
நல் ஒளி வீசிப் படரும் நாற்சந்து ஒன்றில்
எப்படியாவது பிடித்தடையுங்கள்
இருளில் அலைந்து களைத்த மனம்
ஒளியின் வெளியில் அடைபட
விரும்புகிறது.

## தனித்த பாறை

ஏமாந்து கொள்வதில் ஒரு சுகம் உண்டு
அது சோம்பேறியாகும் கலை
அது ஆன்ம திருப்தி என்றொரு
வளையத்தை
ஒவ்வொரு அணுவிலும் மாட்டி
இருக்கிறது

வண்ணத்து பூச்சிக்கு
வண்ணம் கூட சுமை தான்
பசித்திருக்கையில் உற்றுப் பாருங்கள்

எனது உலகை என்னால்
கவிதைக்குள் சுற்றி விட முடியும்
எனது கவிதையைத் தான் என்னால்
ஒரு உலகுக்குள் சுழல விட முடியவில்லை

இருட்டுக்குள் இசைக்கும் குறைவாக
அமர்ந்திருக்கிறேன்
மோதி விட்டு மன்னிப்பு கேட்பதை விட
மன்னிப்பு கேட்டு விட்டு
மோதாமல் சென்று விடுங்கள்

மிகச்சிறு மீந்த உடலை
என்ன செய்வதென தோன்றவில்லை
மிச்சமென தினம் ஒரு தேடல் தினம் ஒரு
கூடல்
திகட்ட திகட்ட தின்ற பிறகும்
தீரா பசிக்கு தேகம் என்று பொருள்

தொடர்பற்று நிகழ்த்தி பார்க்கும்
வல்லமையை
தாராயோ தருவேனோ
தகிப்பின் ஜொலிப்பை சலசலக்கும்
ஓடையின் தூரங்களில் கால் அசைத்து
கவனிக்கிறேன்

அருகே
எல்லாம் மறந்த தனித்த பாறை ஒன்று
உருவத்துக்கு காத்திருக்கிறது

## அப்பள இதயத்தின் அரைகுறை புரிதல்

அங்கீகாரத்துக்கு அலையும் மனமே
அடுத்தவர்க்காக
எப்போதேனும்

சிந்தித்திருக்கிறாயா
வாழ்வின் அடிப்படைக்
கரிசனங்கள் மேல்
நின்றிருக்கிறாயா

வாய் கிழிய அறம் புலம்பும் உறவே
அவிழ்ந்த உடையோடு
ஆதரவற்ற வழி நடுவே
பித்தேறி பிசுபிசுக்கோடு
நடக்கும் ஒருத்திக்கு
ஓடோடிச் சென்று
மானம் காத்திருக்கிறாயா

தனக்கு மட்டும் தான்
கவலை என பிதற்றும்
அறிவே
கல்லுடைத்து தார் போட்டு
உடல் நோக வேர்த்து பூக்கும்
சாலையோரப் பணியாளனிடம்
எப்போதாவது
பேசி இருக்கிறாயா

சமூகம் என்ன செய்தது
நான் ஒதுங்கி கொள்கிறேன்
என்பது
வெட்கங்கெட்ட இயலாமை
சமூகம் தூக்கி வீசினால்
சாக்கடையும் நகராது
நாறிச் சாவாய் அன்பே

எனக்கு ஏன் யாருமே இல்லை
என்பது
அறியாமையின் மிகு புரட்டல்
நீ ஏன்
யாருக்காகவும் இல்லை என்பதே
மறுபரிசீலனைக்கு வழி காட்டும்

யாரையுமே நம்பாமல்
இருப்பது மதி நுட்பம் அல்ல
அற்பத்தின் மேல் நடுங்கும்
அப்பள இதயத்தின்
அரைகுறை புரிதல் அது
மனிதனை நம்பும்
வீதி நாய்களைப் பார்
வாலாட்டி தாலாட்டும் இன்றை

வெற்றுப்பெண்ணியத்தில்
கெத்து ஆணியத்தில்
வீணாய்ப்போன
கூட்டத்து சிப்பாயே
புறம் பேசுவதில் வாங்கிய
பட்டயப்படிப்பால் என்ன பயன்

அவன் சரி இல்லை
இவன் சரி இல்லை
அது சரி இல்லை
இது சரி இல்லை
எதுவும் சரியில்லை என்றால்
நம்பு
நீ சரி இல்லை....!

## திடீர் சொந்தம் PFகளால் ஆனது

இல்லாத உறவெல்லாம்
இனிப்போடு வரும்
பூ பூவாய்
முதலைக் கண்ணீர்
வாசலைச் சுடும்
வாயெல்லாம்
சொல் பூச்சில் பல் காட்டும்

உறவுக்கெல்லாம்
தலையென்று
உனைக் காட்டும்
கூடை கூடையாய்
முகஸ்துதிக்கும்
கூனிக் குறுகி
முகமூடி சிரிக்கும்
ஆப்பிள் ஆரஞ் கமகமக்கும்
அவரு யாருனு நினைச்ச
என்று குதி குதிக்கும்
இல்லாத காலத்தில்
எட்டி நின்றதை மறவாதே

நிலை இல்லாத
வாழ்த்தெல்லாம்
வரிசை கட்டும் சரியாதே
திடீர் சொந்தம்
PF களால் ஆனது
நம்பாதே
வெற்றுச் சொந்தம்
முட்டு சந்து
நுழையாதே....!

—

கவிஜி

---

# கவிதை வனம்

வா...
வந்தொரு முத்தம் கொடு.
உடையட்டும்
என் மௌனவிரதம்.
*

என் குற்றங்களை
சொல்லித் திரிந்தவன்;
நான் திருந்தியதை
யாரிடத்திலும் சொல்லவில்லை.
*

மகள் கன்னத்தில்
ஆசையாய்க் கொடுத்த
முத்தத்தைத் துடைக்க
முகமெங்கும் பரவுகிறது
தித்திப்பு.
*

பற்களைக் கடிக்கும்
ஒருவனின் கோபத்திற்காக;
ஒருபோதும் இடியை
நிறுத்திக் கொள்ளாது வானம்.
*

உயிர்கள் பூமியில்
பிறப்பது போலத்தான்.
செடிகளில் பூக்கள் பூப்பதும்.
*

ஆகாதெனத் தெரிந்தும்
கூட்டிக் கழித்துப் பார்த்து
முன்வைக்கிறேன் அவளிடம்
என் காதலை.
*

தகுதியற்றவர்களுக்கே
அதிகம் வாய்க்கிறது
அதிகார நாற்காலிகள்.
*

என்னைப் பிடிப்பதற்கான
காரணங்கள் பல சொல்லும்

பெருங்கூட்டத்தில்தான்,
என்னைப் பிடிக்காததற்கான
ஒரு காரணத்தையும் சொல்லாத
நீயும் இருக்கிறாய்.
*

பச்சை மணத்தை
நுகரத்தான் பொசுச்சென
புலர்கிறது கிழக்கு.
*

நான் கற்றுக்கொடுத்ததென்னவோ
உன் பெயரைத்தான்.
என் பெயரை வழிமொழிகிறது
நீ காதல்பரிசாய் தந்த
பச்சைக்கிளி.
*

முன்னிரவைக் காமத்திற்கும்
பின்னிரவைக் கனவுகளுக்கும்
பங்கிடுகிறது நடுத்தர வாழ்க்கை.
*

எனக்குப் பின்னால்
யாருமில்லை.
உனக்கு முன்னால்
யாருமில்லை.
எனக்கு முன்னால்
நீயிருக்கிறாய்.
உனக்குப் பின்னால்
நானிருக்கிறேன்.
*

பின்னிரவையும்
சேர்த்து தின்று முடிக்கிறது
பெருங்கனவு.
*

நந்தவனத்தில்
புதிதாய் நுழைந்த வண்டு.
கல்லூரி வளாகத்தில் வாலிபன்.

— பாரியன்பன் நாகராஜன்
82/32 -B, பிள்ளையார் கோயில் தெரு
காமாட்சி அம்மன் பேட்டை
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353



# குறுங்கவிதை

குளம்தூர்வாரும் ஜேசிபி
மண் அள்ளிச் செல்லும்
சிறுவன் பொம்மை வண்டி

கோடைவிடுமுறை நிறைவு
பள்ளிக்குத் தயாராகும் மழலை
பையிலமரும் பூனைக்குட்டி ...

மூடியிருக்கும் கதவு
சுவரில் ஏறும் வரையாட்டிற்கு
எல்லாம் வழி...

—
ஸ்ரீவி. முத்துவேல்,
துபாய்.



# முயற்சிக்கு

காற்புள்ளி கொடுங்கள்
அது வறுமைக்கு
முற்றுப்புள்ளி வைக்கும்.

நான் நானாக
இருக்கும் வரை
நலமாக இருந்தேன்
நான் நீயாகிப்
போனபின்பு

ம்ம்...........
வேண்டாம்
அடுத்த வரி
சொன்னால் அது
கவிதையாகிவிடும்
எனக்குள்ளேயே
இருந்து தொலையட்டும்

நான்
நீயாகிப் போனபின்பு
நான் என்னவானேன்
என்று?

எல்லை மீறிய
வெட்கத்திற்கு
ஒரு கை போதவில்லையெனில்
ஐந்து விரல் மடக்கிய
அளவே என் இதயம்
எப்படித் தாங்கும்.

—

ஆனந்தன்,
திருப்பூர்.





ஓவியம்:
மா. நிரல்யா,
இரண்டாம் வகுப்பு,
சிங்கப்பூர்.

# எது வெற்றி..!

வெற்றி என்பது..
பிறரை தோற்கடிப்பதா ?...

வெற்றி என்பது அடுத்தவரை
படுகுழியில் தள்ளுவதா ...?

வெற்றி என்பது பிறரது
கண்ணீரில் நீங்கள்
கரை சேர்ந்ததா....?

வெற்றி என்பது
அடுத்தவர் பிணத்தின் மீது
ஏறி நின்று கொண்டாடுவதா..!?

வெற்றி என்பது
ஏழைகளின் கண்ணீரால் கிடைத்ததா..?

இல்லை... இல்லவே ...
இல்லை...!?

உங்கள் வெற்றி...
உங்கள் எதிரியையும்
மகிழ்ச்சி கொள்ள
செய்ய வேண்டும்...!

காரணம் -
உங்கள் வெற்றி நியாயமானது...!
அந்த வெற்றி மனித
நேயமிக்கது...!

—

முனைவர். சா.சம்பத்,
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி.



---

# சுயமரியாதை

கணவரின் ஊதியத்தில்
பெரும் பகுதி
வட்டிக்கு செல்வதால் மீண்டும்
வட்டிக்கு  கடன் வாங்கி
இட்டிலி கடை வைத்து குடும்பத்தை
சமாளிக்கும் சராசரியானவள்

ஒவ்வொரு நாளும் அவளின் கற்பை
விலை பேசி நிற்கிறது வாங்கிய கடன்
வட்டியில் மூழ்கும்
குடும்பத்தை கரை சேர்க்க
ஊராரின் வசவுச் சொற்களை
வாங்கி கட்டிக் கொள்கிறாள்

கண்ணீரால் கழுவியும் துடைத்தெறிய
முடியாத அவமானத்தை கண்ணெதிரே
கண்டு வளரும்
பிள்ளைகளின் முன் ஊமை சிரிப்பை
உதிர்த்து
உள்ளுக்குள் குமுறுகிறாள்

உழைப்பின் வேகத்தைக் கூட்டுகிறது

அவளின் மன அழுத்தம்
ரேஷன் அரிசியை தனக்கு உரமாக்கி
நல்லரிசியை உணவாக்கி தன்
பிள்ளைகளுக்கு தருகிறாள்.

யாருக்கும் தெரியாமல் கன்னங்களின்
கசிவுகளை துடைக்கிறாள்
முந்தானையை பிடித்து வளரும்
குழந்தைகளின் கரங்களில் ஒட்டிக்
கொள்கிறது ஈரம்

படித்து முடித்து வாழ்வின் ஒவ்வொரு
நொடியும் உழைத்து இழந்ததை
மீட்டெடுக்கும் பிள்ளைகள் தாயின்
சுயமரியாதையும் சேர்த்து மீட்டெடுக்க
முயல்கிறார்கள்.

—



பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்.
கைப்பேசி: 6380704001

# பொறாமை

வாழ்தலின் நன்றென்பதில் சகிக்காது
வல்லூறென இடையில் நுழையும்
தாழ்தலின் தடுமாற்றத்தை
வேடிக்கையாக்கி
தலைமீது வைத்துக் கொண்டாடும்
தனக்கான தேடலில் நிம்மதியற்றே
பேராசைக்குப் பழியாகும்
உலகத்தின் உயர்வளிக்கும் பயணத்தில்
இடையூறுகள் விளைவிக்கும்
இருப்பதைக் கொண்டு இன்பமெனும்
இல்லறத்தில் எப்போதும் சிறப்புறாமல்
பார்த்திடும் பிறரின் பொருள் மீதே
பித்துப் பிடித்தே பரிதவிப்பில் அலையும்
திறந்திடும் சந்தர்ப்பத்தில் வாய்த்திடும்
வாய்ப்புகளை கைக்கொள்ளாது
வீணாக்கி
அடுத்தவர் வாய்ப்பை அலசியபடி
அவதூறில் அசிங்கப்படுத்தும்
பிறந்திடும் இன்பத் தருணத்தையும்
மறந்திட்டே மற்றவரை நோக்கும்
உள்ளத்தில் வளரும் தீயென
மனத்தினைப் பொசுக்கிடும்
நினைப்பினில் நல்லதைத் துறந்தே
சினத்தினை நெஞ்சினில் வளர்த்திடும்
இமைப் பொழுதும் பொதுநலம்
எண்ணாமல்
சுமையாகத் தோளில் ஏறிடும்
பொறாமையின் ஓர் துளியும்
புன்னகையை புதைத்து விட்டு
பாதையெங்கும் பாடை கட்டும்
புறந்தள்ளி அதையே தவிர்த்து
புத்திக்குள் ஏற்றிடும் உறுதியில்
எல்லோரும் இன்புற்றிட உழைக்கும்
அன்பினில் உயர்வோம்

--------------------

## அதே வனம்

அதே வழித்தடம்

அதே அருவி
அதே நீரோடை
அதே நான்
மலர் தூவி
நிழல் பரப்பி
பசியாற்றும்
அதே கடவுளைத்தான்
காணவில்லை

—



இளையவன் சிவா,
கைபேசி: 9965359130

---

# செலவில்லா எனது திருமணம்

தாலி செய்ய கூலி கொடுக்கும் செலவு
நான்
வைத்ததில்லை...

கணையாழி மாற்றிடும் கல்யாணச்
செலவு
வைத்ததில்லை...

தந்தியடித்து யாருக்கும் பந்திவைக்கும்
செலவு
வைத்ததில்லை...

ஊரைக்கூட்டி ஊர்வலம் போகும்
செலவும்
வைத்ததில்லை...

ஊரார் பேரார் உணவில் உப்பு,
புளியில்லயென குறை சொல்ல
வைத்ததில்லை...

ஆதனம், சீதம் என்று பேசி அவஸ்தைகள்
கொடுத்ததில்லை...

கல்யாணப் பெயரில் இருவீட்டாரையும்
கணக்குப்பார்க்க
வைத்ததில்லை...

காதலித்த காரணத்தால் யாருக்கும்
பெரும் சிரமம்
கொடுத்ததில்லை...

காலத்தால் வந்த விதியென்று
பெற்றோரும் மற்ரோரும் உணர
வைத்ததில்லை...

காதலென்ற சொல்லால் இருவீட்டார்
சம்மதத்துடன் கடதாசியில்
கையொப்பமிட்டு கரம்பிடித்தேன்
என்னவளை...

—

கோ. கோகுலநாதன்.
நெல்லிக்காடு,
மட்டக்களப்பு,
இலங்கை.

# ஏதோ ஒன்று

ஏதோ ஒன்றிற்காக எத்தனையோ
அமைதி
எத்தனையோ கேள்வி
எத்தனையோ அவமானங்கள்
எத்தனையோ மென் சிரிப்புகள்
ஆனால்
ஏதோ ஒன்றில் மட்டும் சிறு கடத்தல்
நடந்தே தீர்ந்திடுகிறது

அந்த ஒன்றிற்கு இருளின் பட்டாளம்
அதிகம்
அந்த ஒன்றிற்கு பாதச்சுவடுகள் மிளிரும்

அந்த ஒன்று கேட்பாரற்று கிடக்கும்
அந்த ஒன்று அமைதியை மட்டுமே
கையாளும்
அந்த ஒன்று ஆரோக்கியமாக
புன்னகைக்கும்
அந்த ஒன்றுக்கு அவைகள் இவைகளென
எல்லா உறவுமுண்டு

எல்லாமுமாமாய் நின்ற அந்த ஒன்றுக்கு
இறகோன்று முளைத்து
இன்றுவரை பறந்து கொண்டுதான்
இருக்கிறது அந்த்த்தின் மனதில்...!

## சாயலுக்கென ஒரு பிம்பம்

எட்டிப் பிடிக்கும் அளவிற்கு அந்த
பட்டம் அருகாமையில் பறக்கவில்லை
ஆனாலும் விரல் நீட்டிக்
கொண்டேயிருக்கிறது குழந்தை மனம்

வியர்த்து வடிந்த உடலோடு
ஒரு மழைத்தூரல் அவசியமாகிறது
இடது வலதும் சுற்றிடும்
காற்றாடிக்குத்தான் அனைப்பு
பட்டன்களில் அத்தனை ரேகைகள்

பட்டம் பறந்துவிட்டது
வியர்த்து வடிந்துவிட்டது
மழையும் ஓய்ந்துவிட்டது
ஆசைப்பருக்கள் மட்டும் அதே
வடிவத்தில்

நன்றியைப் பார்த்து
ரொட்டித்துண்டுகளக வீசிவிடும் நாய்
குட்டிகளுக்கு நிமிராத வாலின்
வளையம்தனில் அடங்கிவிடுகிறது
வாழ்வு

கூடிய வரை
எல்லாம் நம்முடனே இருக்கட்டும்
எதிரெதிர் அமைந்து விட்டால்
எல்லாம் பிம்பமென முடிவாகிவிடும்

## வேறு யாராக இருக்கக்கூடும்

நீண்ட நாளாக
என்னைப் பார்த்து கடந்து செல்பவரின்
விழி சாயல்தான் என் கண்முன்
அவ்வப்போது வந்து செல்கிறது

சென்மங்களை கடந்த உறவாக
இருக்கலாமென நண்பர்கள் எல்லாம் கூறி
நகைத்தனர்

இன்ஸ்டாகிராம் காமெடி போல்
தெருநாய்களின் சாயலென சிரித்து

சென்றனர்

ஆனாலும் தினம்
அவன் என்னை முறைத்து செல்கிறான்
ஒருநாள் சிரித்து செல்கிறான்
ஒருநாள் கண்டும் காணாத
கடன்காரன் போல் சென்று விடுகிறான்

இன்றும் அவனை எதிர்பார்த்து
நான் நடந்தேறி
நகர்ந்தேறி செல்கிறேன்

கண் எட்டும் தூரத்தில்
வந்தும் மறைந்தும் சென்றவன்
அவ்வப்போது சீசன் மன பறவையென
நேற்றுதான் கனவில் வந்து கூறினான்
என்னுருவில்...

## நிர்வாணமேய்தும் கண்கள்

ஆடை அவிழ்த்து கிடக்கும்
அந்த உடலைத்தான்
நீங்கள்
நிர்வாணமென்கிறீர்
மெல்லுணர்வும்
சில்லுணர்வும் புணரும்
நொடிகளைத்தான்
நிர்வாணமென்கிறேன்

உடை நழுவி தெரியும்
மச்சங்களெல்லாம்
நிரவாணத்தின் நட்சத்திரங்கள்
வானத்தை மட்டும்தான்
ஆசையொழுக பார்க்கிறீர் அவைகளாய்...

## குபேரனின் நகத்துண்டு

கிளைகளுக்கு இல்லாத வலி
வந்தமர்ந்து செல்லும் பறவைகளுக்கு
வந்துவிடுகிறது
கிளை முறிந்து விழுகையில்

நீரும் நிலவும் ஒன்றாகியதும்
எடையிழந்து மிதக்கிறது
நம்மில் காதல்

பட்டமரங்களில்தான்
அவ்வப்போது அச்சிடப்பட்டு பிரிகிறது
காதலின் வழி(லி)கள்

கையில் திருவோடு
விழுந்தவுடன் முளைக்கிறது
குபேரனின் நகத்துண்டு

விழுந்த கல்லின்
எடையும் அதிகம் தான்
ஈர்த்த நீருக்கு
சுமையும் அதிகம் தான்
அலையை மட்டும் பருகி செல்கிறது
நீரில் மீனும்
வானில் மழை நீரும்

—

சே. கார்கவி கார்த்திக்,
நாகப்பட்டினம்.



# ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு விதம்

நானற்ற நாளொன்றில்
எதேச்சையாகவோ
திட்டமிட்டோ
என் வீட்டு வாயிலைக்
கடந்து சென்றிருக்கிறாய் நீ
நான் வரும்வரை
உன் வருகையை நினைவுறுத்த
நறுமணந்து மலர்வனமாய்
கமழ்ந்திருந்தது தெரு.

*

அழகானவை எல்லாம்
உன்னை நினைவூட்டிப்
பேரழகாகின்றன....
எங்கே?
யாரை?
எவ்வகையில்
வசீகரித்துக் கொண்டிருக்கிறாயோ
இந்நேரம் நீ ?

*

இந்த நொடி
நீயென் நினைவில்
தாமரை பூத்த பொய்கையென
பேரழகால் கொலுவிருக்கிறாய்
இறுதி சந்திப்பிற்குப்பின்
முற்றிலும் சிதைந்து
கைவிடப்பட்ட சிற்பமாய்
பாழடைந்து கிடக்கலாம்
உன் இதயவெளியின்
வறட்சி மிகுந்த
ஓரிடத்தில் நான்.

*

இதோ இந்த
நீயற்ற வெறுமையை
மேலும் மிகையாய்
நேசித்துச் சுகிக்கிறேன் நான்
நிரந்தரமாய் விலகியபிறகும்
ஒருநொடியும் பிரியாமல்
அருகில்வைத்து
ஆலாபனையாய் ஆராதிக்கிறது
எனை அது.

*

எனதற்ற என்னை
இன்னும் ஏனோ
பயனற்ற வாழ்வின்
நான்கு திசைகளிலும்
தூக்கித் திரிகிறேன்
நீயிருந்த மிச்சத்தைத்
தனிமையின் தீ
விருந்தென மகிழ்ந்து புசிக்கட்டும்
என்னும் மேலான
காரணமாக இருக்கலாமோ?

*

நீ வசிக்கும் ஊரில்
நானும் வசிக்கிறேன்
என்னும் கர்வம் இருக்கிறதே
சொர்க்கத்தில் வாழும்
பெரும்பேற்றினை விடவும்
நிகரற்றது.

*

உன்னை விடவும்
உயர்வானது
உன் பிரிவு
ஒருசில மணித்துளிகள் மாத்திரமே!
அருகிருந்து மட்டற்ற
மகிழ்வளிக்கிறாய் நீ
நீயற்ற எல்லாப்
பொழுதுகளையும்
நீங்காத நினைவுகளோடு
அருள்மிகுத்து ஆட்கொள்கிறது
பேரன்புடன் அது.

*

நிலவை நீ
நேர்கொண்டு பார்த்ததினால்
ஐயோ பாவம்
வளர்வதை மறந்து
அது தேய்ந்துகொண்டிருக்கிறது
நிலவற்ற இருளில்
உன் முகம் பார்த்த விண்மீன்கள்
வானத்தைத் துறந்து
வரிசை வரிசையாய்
பூமியை நோக்கிப்
புலம்பெயர்கின்றன !

*

பூக்களை உதிர்த்தவுடன்
அடுத்த நொடியே
மரங்களனைத்தும்
அழகின்றி அலங்கோலம்
ஆகிவிடுகின்றன
புன்னகையை உதிர்க்கும்
நீமட்டும்
ஒவ்வொரு முறையும்
ஒவ்வொரு விதமாய்
பேரழகால் ஈர்ப்பது எவ்வாறு?

*

உன் விழிகளின்
மைய ஈர்ப்புவிசையில்
இலாவகமாய்
சிக்கிக்கொள்ளும் நான்
என் மொழிகள்
மொத்தத்தையும் பறிகொடுத்து
நிராயுதபாணி ஆகிவிடுகிறேன்
பேரரசின் இராஜ்யங்கள்
ஒரு தேவதையின் காலடியில்
சரணடைந்த வரலாறு
இப்படியாகவும் இருக்கலாம்!

—

பொன். தெய்வா,
ஐவேலி.



## விடிந்தும் விடியாத



**அதிகாலையில்**
**விழித்தும்**
**விழிக்காத**
**உன் அரைத் தூக்கத்தின் விழிகளே**
**இப் பிரபஞ்சத்தின் ஆகச்சிறந்த**
**அரைகுறை அழகியல்**

—

**சூர்யகலா சரவணன், B.E**
**கண்டிதம்பேட்டை.**

# நிதர்சனம்

மண்வாசம்
வரும் போது
தூரத்தில்
மழை பெய்கிறதா
என வானத்தை
நோக்குகையில்
புழுதியைக்
கிளப்பியவாறு
செல்கின்றன
மணல் லாரிகள்

## வேண்டுதல்

தினமும் வேண்டிக் கொள்கிறது
கோயில் யானை
அங்குசமில்லா வாழ்வு

## யதார்த்தம்

உதாசீனப்படுத்த
முடியவில்லை
உதாசீனம் ஏற்படுத்திய
வலியை

## கள்ளமௌனம்

பேசாமல் போகிறாய்
நானும்
பேசாமல் போகிறேன்
ஆங்கே...

அகங்கார வேலிக்குப் பின்
ஏங்கித் தவிக்கின்றன
வார்த்தைகள்

## நேசம்

நம் கைகளில்
எப்போதும்
ஒரு நேசம் இருக்கிறது
ஆனால் நாம் தான்
இறுக மூடியிருக்கிறோம்
கைகளையும்
மனதையும்

## நேசம்

நீளும் பிரிவுகள் மாள
நீளட்டும் நேசக் கரங்கள்

## தவம்

பற்றற்றல்
தவப்பலன்
இறுகப் பற்றுதல்
தவம்

—

பா. சிவகுமார்

# பெருந்தேடலின் காலநீட்டிப்பு

தூங்குபவர்கள் பார்த்தால்
பொறாமை வருகிறது

பொத்துக்கொண்டு வருமதை
பொத்தானிட்டுப்
பொத்திக்கொள்கிறேன்

சட்டென உறக்கம் பெறுபவர்கள்
அதிர்ஷ்டசாலிகள்

கொடுப்பினையோடு குசலம்
விசாரிப்பவர்கள்

உடனடி உறக்கம் உன்னதமன்றி
வேறில்லை

உறக்க முடிவில் நிம்மதியின் அமைதி
பெருவெளியாகி கருவிழி அமரும்

அவ்வின்பம் சுகிப்பது பேறல்லவா

போதையும் வாதையும் ஓய்வும் மறதியும்
தருவது உறக்கம்

ஏனோ எனக்கு மட்டும் உறக்கம்
வருவதில்லை

உடனே அது என்னைப் பற்றிக்
கொள்ளாது

பற்றிக் கொண்டாலும் நிலைக்காது

நீண்டதூரம் பயணம் செய்தே உறக்கம்
பிடித்துத் தூங்குகிறேன்

சிறு ஓசையில் துணுக்குற்று என் தூக்கம்
கலையும்

பின்னரதை அணைப்பதென்பது
முடியாத காரியம்

மின்னலைப்போன்றது அது

மிதமிஞ்சிய குறும்பு செய்வதது

கல்லில் நாருரிப்பது, மீண்டு நித்திரை
கொள்ள எத்தனிப்பது

என்ன செய்ய
நன்றாக உறங்க ஆசைதான்
எனக்கும்

நானதை வைவதில்லை நானதை
பழிப்பதுமில்லை

நானதை சாடுவதில்லை
நானதை சபிப்பதுமில்லை

என் பெருந்தேடலின் காலநீட்டிப்புக்கு
கைகொடுக்கும் கருணை
கொண்டிருக்கலாம் அந்த உறக்கம்

## குறுங்கவிதைகள்

குழாயடி
கொட்டியபடி காணப்படும்
பருக்கைகளோடு எறும்புகள்...

மணமுறிவு
மனமுறிவால்
கிடைப்பதில்லை மறுவாழ்வு...

உயர் ரக வரவேற்போ?
உட்காராமல் நின்றபடி
வரிசையில் வழியோர மரங்கள்...

பிளந்த நிலம்
தொடுத்துக் கொண்டோடுகிறது
பெய்த மழை...

அறுவைச்சிகிச்சை செய்பவர்க்கு
குளிர்நிழல் தருகின்றன
அகன்ற நல்மரங்கள்...

வீடுதோறும் அட்டைப் பெட்டிகள்
வரவே இல்லை
சிட்டுக்குருவிகள்...

வீடில்லையேல்
வேதனையில்லை
கூடாகும் பறவைக்கு மரக்கிளை...

முயன்றும் முடியவில்லை
குழந்தைகளைப் பிரிய
கடலின் அலைகள்...

சவ ஊர்வலத்தில்
சிதறிக் கிடக்கின்றன
சேர்ந்து வாழ்ந்த ஞாபகங்கள்...

என்ன இரகசியமோ?
சலசலத்தபடி பேசுகின்றன
பூமியோடு சருகுகள்...



—
*Dr. ஜலீலா முஸம்மில்,*
ஏறாவூர்,
இலங்கை.

## நான்கு ஆண்டுகள் கழித்து மீண்டும் அவளை சந்திக்க நேர்ந்தது.

அன்று பார்த்தது போலவே இன்றுமிருந்தாள் இருந்தாள்.

சில சின்னஞ்சிறு மாறுதல்கள் மட்டும் நிகழ்ந்திருந்தன கடந்த ஆண்டுகளில்.

அவள் தோற்றம் கொஞ்சம் சிதைந்தும் பொழிவு கொஞ்சம் இழந்தும் இருந்தாள்.

அவள் வைத்திருந்த தட்டில் மட்டும் மாற்றமில்லை அதில் முன்னைவிட அதிகமாகவே நெழிந்திருந்தது.

அவள் ஆடையில் மாற்றமில்லை அதன் நிறத்தில் மாற்றம் நிகழ்ந்திருந்தது.

அந்த ஆடையை நெய்த நூலைவிட அதை தைத்த நூல்களே கொஞ்சம் மிகையாக இருந்தது.

அவள் அதே வார்த்தைகளை அதே தொனியில் கூறியமடியே தட்டுடன் கையை நீட்டினாள்.

இவன் சிறுதொகை சில்லறைப் பணத்தை தட்டில் தூவினான்.

அந்த சில்லறைக்கு அவள் சில பூக்களை புன்னகைத்துவிட்டு

அடுத்த நபரை நோக்கி தட்டை நீட்டியபடி நடந்தாள்.

இவன் கடந்தான்.

—

கோ. தனுசன்,
மட்டக்களப்பு,
இலங்கை.

---

# வார்த்தைகள் தேடுகின்றேன் ஐயா உன் புகழ் பாட...

இன்று இந்த வரிகளுக்கு வித்திட்டவன் அல்லவா நீ...

கைநாட்டின் மகன்களை இன்று கணினி பொறியாளன் ஆகியவன் அல்லவா நீ...

பசிக்கு உணவளிதாய் , படிப்புக்கு பதிகம் தந்தாய்...
எப்பாடு பட்டாவது படி என்றாய்
இன்று தலை நிமிர்ந்து நிற்கின்றோம் ஐயா...

தரணியின் தலைமகனாய் உன்னால்.....

எளிமைக்கு விளக்க பொருளோனே..
நேர்மையின் அகராதியே...

நாளும் பொழுதும் நாடும் மக்களும் உன் பிள்ளைகளாய் முன்னின்று மொழிந்தவனே...

அணைகள் பல கட்டி தொழிற்சாலைகள் பல அமைத்து...

இருண்டு இருந்த தமிழ்நாட்டின் ஒளி விளக்காய் வந்தவனே...

இன்றும் நீ அமைத்த பாதையில் சிரமம் இன்றி நீண்டு செல்கின்றோம் ஐயா...

கார்த்திகைக்கு பின் அடைமழை இல்லை
காமரசுக்கு பின் நல்லாட்சி இல்லை...

உன் புகழ் பாடி இன்புறுகிறேன் ஐயா...

வாழ்க காமராசர்...

—

விருதை.
கவிபாரதி. சதிஷ் குமார்

# அதிலிருந்து மட்டுமல்ல...

நம்பிக்கை
வார்த்தைகளில்
மட்டுமல்ல

கடந்தவைகளில்
பெற்ற வெற்றியில்

கிடைத்த தோல்வியில்
பெற்ற அனுபவத்தில்

அதனால் கற்று கொண்ட
புதிய விசயத்தில்

விசய ஞானம்
மேம்பட கொண்ட
பயிற்சியில

இவைகள் கொண்டு
செயல் முடித்தால்
கிடைக்கப்போகிற
நல்ல முடிவால்
பெறப்போகிறவற்றுக்கான
எண்ணக்காட்சிகளில்...

## நான் எல்லாம் அப்ப...

தன்னை முன்னிறுத்துவதற்கும்
பாராட்டு கேட்கவும்
ஆசைப்பட்டு
நான் எல்லாம் அப்ப

என்று பழைய கதை
ஆரம்பித்தால்

சிலருக்கு
கேட்டு கேட்டு
சலித்திருக்கலாம்

சிலருக்கு
உண்மையா
என எண்ண
தோன்றலாம்

சிலருக்கு
அதைப்பற்றி
கேட்க விருப்பம்
இல்லாமால்
இருக்கலாம்

சிலருக்கு
கேட்க
பொறுமை இல்லாமால்
இருக்கலாம்

சிவருக்கு
செவி கொடுக்க
நேரம் இல்லாமால்
இருக்கலாம்

எதுவும் சொல்ல
வேண்டாமே

நம்முடைய
தற்போதைய
திட்டமிடலும்
செயல்பாடுகளும்
விளைவான

முடிவுகளும்
பேசட்டுமே...

## அதிலிருந்து மட்டுமல்ல...

நம்பிக்கை
வார்த்தைகளில்
மட்டுமல்ல

கடந்தவைகளில்
பெற்ற வெற்றியில்

கிடைத்த தோல்வியில்
பெற்ற அனுபவத்தில்

அதனால் கற்று கொண்ட
புதிய விசயத்தில்

விசய ஞானம்
மேம்பட கொண்ட
பயிற்சியில்

இவைகள்  கொண்டு
செயல் முடித்தால்
கிடைக்கப்போகிற
நல்ல முடிவால்
பெறப்போகிறவற்றுக்கான
எண்ணக்காட்சிகளில்...

## ஆமாவா? இல்லையா?

வாழ்க்கை பயணத்தில்
பல வெற்றிகள்
கிடைத்தாலும்
கிடைத்த முதல் வெற்றி

தோல்விக்குப்பின்னே
முயற்சியால் மீண்டாலும்
இழந்தது பற்றிய வருத்தம்

செயல் மேன்மையால்
வசை மொழியை
பின்னர் பாராட்டாய்
மாற்றினாலும்
பெற்ற அவமானம்

நிகழ்கால
நிஜங்களில்
நிறைய சந்தோசங்கள்
இருந்தாலும்
பழையவைகளின்
குதூகலம்

மனதின் ஓரத்திலாவது
எப்பொழுதும்
இருக்கும்

ஆமாவா
இல்லையா

## அது சடங்காய்..

கருத்து மோதலில்
தானே சரி என எண்ணி
தொடர்ந்து பேசுகையில்
நான் சொல்வதையும்
கேள் என்கையில்

'சொல்லு '
என்ற உதட்டுவார்த்தை
வெறும் சடங்கு தான்

அதை எப்படியும்
மனதுக்கும் புத்திக்கும்
கொண்டு செல்லப்போவதில்லை

முன்அனுமானம் கொண்டதால்...

## நானே நானா

சாதாரண நிலையில்
எதிர்பாராதவைக்கு
நிதாமானமும்
தோல்விக்கு
காரண ஆராய்ச்சியும்
வெற்றியில்
அடுத்த கட்ட நகர்வும்
கருத்து மோதலில்
அமைதியான
அழுத்தப்பேச்சும்
ஆசைக்கு
தகுதி ஆய்வும்
முடிவுக்கான
காத்திருத்தலில்
பொறுமை காத்தலும்
வேண்டும் என
எண்ணம் கொண்ட நான்
நிகழும் கணத்தில்
இவை ஒன்றுமே
நடக்காத போது
எழும் கேள்வி
நானே நானா?

## எத்தனை ரகம்...

இறைவனை வணங்குவதில் தான்
எத்தனை வகை...

தினசரியாய்
பிரார்த்தனை
காரியத்திற்காய்
பிரார்த்தனை
நன்றிக்காய்
பிரார்த்தனை
கேட்டது கிடைக்கவில்லை
என மீண்டும் பிரார்த்தனை

வீட்டிலியே பிரார்த்தனை
தினசரி கோயிலில் பிரார்த்தனை
விசேச நாட்களில் மட்டும்
கோயிலில் பிரார்த்தனை
தனக்காக மட்டும் பிரார்த்தனை
உறவுக்கும், நட்புக்கும்
பிரார்த்தனை
சமுகத்திற்கே பிரார்த்தனை

நேருக்கு நேர் வணங்கி
பிரார்த்தன
கண்மூடி பிராராத்தனை
அருகில் யாரும் இல்லையனில்
சப்தமாய் பிரார்த்தனை
அருகாமையில் மனிதர்
இருக்கையில்
இதழால் தனக்கு மட்டும்
கேட்கும் படி முணுமுணுத்து
பிரார்த்தனை...

## ஒன்று தான் ஆனால்

இன்றைய தலைமுறை
தொழில் நுட்ட அறிவிலும்
எதிர்கால யோசிப்பிலும்
தனக்கான தேடலிலும்
சிறப்பு தான்

இந்த பேச்சாளரின்
பேச்சு அருமை

இந்தப்படத்தின்
நகைச்சுவை நன்று

சமூகம் மேல்
குறைகள் சொல்லப்பட்டாலும்
மனிதத்தன்மை
செயல்கள்
நடந்து கொண்டு தான்
இருக்கிறது

மாறி வரும்
தேவைக்கு ஏற்ப
புதியவை
வந்து கொண்டிருக்கிறது

இது
சலனமற்ற பொழுதுகளில்
எண்ண ஓட்டம்

இதுவே
மனதுக்குள்
இதுவா அதுவா
என யோசனையிலும்

வருத்தங்களும்
சோகங்களும்
பயங்களும்
நம்பிக்கையின்மையும்
நிரம்பி இருக்கையில்

சரி
அதுக்கு என்ன இப்போ?

## பொருளாதாரம் சாரா

இது தான் நடக்கும்
சொன்ன விசயம்
அப்படியே நடக்கையில்

மனதில் உதித்த
எண்ணங்களை
அப்படியே
வார்த்தையாக்கும் போது

திட்டமிடபடியே
செயல் முடியும் போது

உரிய நேரத்தில்
செய்த உதவியால்
பெற்றவர் முகத்தில்
மலர்ச்சி காணும் போது

நம்மை போல்
மற்றவரும்
யோசிக்கையில்

எதிர் மனிதனின்
உடல் மொழியால்
மனதை யூகிக்க முடிகிற போது

நெடிய இடைவெளிக்குப்பின்
உறவின் மற்றும் நட்பின்
சந்திப்பில்

வருவது பெரு உவகை

எல்லா சந்தோசங்களும்
பொருளாதாரம் சார்ந்ததாய்
இருக்க வேண்டிய
அவசியம் இல்லை

## டும் டும்...

அப்ப எல்லாம்

முழுவதும்
தெரிகிறதோ

தெரியலியோ
எண்ண பரிமாற்றம்
செய்தது

புத்தியை
முன்னுக்கும்
பின்னுக்கும்
அலைக்கழிக்காமால்
அந்த கணத்தை
அனுபவித்தது

பொழுது பார்க்காமால்
நேரக்கணக்கு
வைத்துக்கொள்ளாமால்
அரட்டை அடித்தது

சகாக்களின்
சிக்கலுக்கு
தீர்வு சொன்னது
இழப்புக்கும்
சோகத்துக்கும்
ஆறுதல் கிடைத்தது
பெற்ற அங்கீகாரத்துக்கு
உள்ளம் ஆட்டம் போட்டது

என சம்பந்தபட்டவர்களிடம்
மீண்டும் பகிர

முதலில்

ஞாபக அடுக்குகளில்
சேமிக்கப்பட்டிருக்க வேண்டும்

அந்த நிலையில்
மனம் இருக்க வேண்டும்

நேரிலிலோ
அலை பேசியிலோ
பகிர நேரம் கிடைக்க
வேண்டும்

சம்பந்தபட்டவர்கள்
தொடர்பிலும்
அவர்கள் அதை ரசிக்கும்
நிலையிலும்
இருக்க வேண்டும்

## அப்ப எல்லாம்...

கொடுத்த உழைப்புக்கு
வெற்றி பரிசாகையில்
'இப்படியே தொடரனும்'

முயற்சித்தும்
கிடைத்த தோல்விக்கு
'இதோடு முடியணும்'

திட்டமிடாத
அவசர அவசிய
பணிகள் வருகையில்
'அடிக்கடி தொந்தரவு
செய்யக்கூடாது'

கச்டம் என நினைத்தது
கைகூடுகையில்
'எல்லாமே இப்படி
இருந்தால் எவ்வளவு
நன்றாய் இருக்கும்'

முற்றிலும்
எதிர்பாரா
கச்டங்கள்
வருகையில்
'இதுவே வாழ்வில்

வருகின்ற கடைசியாய்
இருக்கட்டும்

என
எண்ணுவது
மனித மனங்கள்

நடைமுறையில்
சாத்தியமில்லை
என்ற யதார்த்தம்
உணர்ந்த போதும்...

## அந்த சிலரில்...

பெரிய மேடைகளில்
பேச்சாளர் பெயர் பெயராய் சொல்லி
இன்னும் சிலர் விடுபட்டிருந்தால்
மன்னிக்கவும் என்கையில்

குழுவாய் செய்த பணிக்கு
பாராட்டு கிடைக்கையில்
காரணமாய் நிறைய
நபர்களை சொல்லிவிட்டு
இன்னும் சிலர் உள்ளனர்
என்கையில்

படைப்பு போட்டிக்கான
முடிவு அறிவிப்பில்
தன் பெயர் இல்லாத போதும்
இன்னும் சிவரின் படைப்புகள் அருமை
போட்டி விதிகளின் படி
தேர்வு செய்யவில்லை
என்கையில்

அந்த சிலரில்
நாமும் உண்டா
என மனதுக்குள்ளே

ஏக்க கேள்விகள்...

## அதனாலேயே...

தன் நிலை விளக்கம்
கொடுத்து கொண்டிருப்பதலாயே

நல்ல முடிவுகள்
நம் செயல்களால்
வருவதாலையே

நமக்காக
பிறர் பரிந்து
பேசுவதாலையே

எதிர் வருபவற்றை
துல்லியமாய்
கணித்து
சரியாய்
திட்டமிடுவதாலேயே

விமர்சிப்பவரிடத்தில்
மாற்றம் ஏற்பட போவதில்லை

அனுமானங்களற்று
விருப்பு வெறுப்பற்று
மனசாட்சியின் படி
நடந்து கொள்ளும் வரை...

—

*A.S. சுந்தரராஜன்,*
மானாமதுரை, கைப்பேசி: *9994920236*



# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.